## “நிபுணதா சவிய”நலன் திட்டம் - 2024

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அங்கத்தவர்களின் க.பொ.த. உயர் தரப்பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் நிதியுதவி வேலைத்திட்டம் 2023 ஆம் ஆண்டு முதல் புதிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

அதற்கமைய, 2023ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சபையில் செயலூக்கமுள்ள அங்கத்தவர்களின் க.பொ.த. உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றிய பிள்ளைகளுக்கு தேசிய தொழிற் தகைமைகள் (NVQ)3,4,5 மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள பயிற்சி நிறுவனமொன்றினால் நடத்தப்படும் பாடநெறியொன்றை பயிலுவதற்காக அதிகபட்சமாக ரூ.50,000.00க்கு உட்பட்ட வகையில் நிதியுதவியை வழங்குவதற்கு இந்த புதிய நலன் திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்படுகின்றது.

### 1.அடிப்படைத் தகைமைகள்

- 2023 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகளாக இருத்தல். (சித்தியடைய வேண்டியது கட்டாயம் அல்ல)
- பாடசாலை விண்ணப்பதாரிகளாக மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரிகளாக உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய 23 வயதுக்கு மேற்படாத பிள்ளைகளுக்கு இந்த நலன் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க முடியும்.
- மாணவ மாணவிகள் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் (2023 ஜனவரி) தாய் /தந்தை/பாதுகாவலர் இந்த நிதியத்தின் செயலூக்கமுள்ள அங்கத்தவராக இருத்தல் வேண்டும். அதற்கிணங்க, 2023 ஆம் ஆண்டுக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதம் முதல் 2024 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் வரையில் அங்கத்தவர் சார்பில் தொடர்ச்சியாக பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- சுய தொழில் வகையின் கீழ் பதிவு செய்துள்ள செயலூக்கமுள்ள அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் இந்த நலன் கொடுப்பனவை வழங்குவதற்கு பரீட்சைக்குத் தோற்றிய மாதத்திற்கு முன்னரான 36 மாத காலத்திற்கு தொடர்ச்சியாக பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- பெற்றோரில் இருவரும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் அங்கத்துவத்தைப் பெற்றிருப்பின் ஒருவர் மாத்திரம் விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
- அவ்வாறே, இந்த நிதியுதவித் திட்டத்தின் கீழ் ஒரு மாணவர் ஒரு முறை மாத்திரம் தகுதி பெறுவார்.

**2. பிள்ளைகளின் தொழிற் கல்வியை வெற்றிகரமாக நிறைவேற்றும் நோக்கில் 14 துறைகளை உள்ளடக்கி 100 பாடநெறிகள் இம்முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.**

**1 Agriculture:**

1 G50S008 Agricultural Equipment Mechanic
2 A01S001 Plant Nursery Development Assistant
3 B05S004 Aquaculture Technician
4 A01T006 Plantation Food Technology

**2 Apparel and Textile:**

5 D18S012 Apparel Design Technician
6 D18S006 Fabric Cutter
7 D18S001 Industrial Sewing Machine Operator
8 D18S004 Work Study Officer
9 D18S005 Quality Assurance Supervisor (Apparel Production)
10 D17S004 Batik Artist
11 D18S004 Tailor
12 D18T003 Fabric Technology and Management
13 D18S012 Apparel Design Manufacturing Technology

**3 Automotive:**

14 G50S001 Automobile Air Conditioning Mechanic
15 G50S002 Automobile Electrician
16 G50S003 Automobile Mechanic
17 G50S004 Automobile Painter
18 G50S005 Automobile Tinker
19 G50S017 Diesel Engine Mechanic
20 G50S013 Diesel Pump Mechanic
21 G50S006 Motorcycle Mechanic
22 G50S007 Three Wheeler Mechanic

**4 Building and Construction:**

23 F45S019 Aluminium Fabrication with Interior Decoration
24 F45S005 Construction Craftsman (Masonry)
25 F45S008 Construction Equipment Operator
26 F45S009 Draughtsperson
27 F45S014 Elevator Technician
28 F45S004 Wood Craftsman (Building)
29 F45S016 Scaffolder
30 F45S006 Construction Site Supervisor
31 F45S007 Quantity Surveying Assistant
32 F45S013 Interior Decorator

33 F45S011 Laboratory Attendant / Laboratory Technician (Construction Sector)
34 F45S012 Road Construction Site Equipment Operator
35 F45S028 System Formwork Installer
36 F45T002 Quantity Surveying
37 G50S010 Construction Equipment Mechanic

**5 Care and Healthcare:**

38 N85S010 Care Giver
39 N85S002 Nurse Assistant
40 N85S004 Dental Surgery Nurse Assistant
41 N85S011 Occupational Health and Safety Officer
42 N85S007 Laboratory Assistant
43 N85S038 Pharmaceutical Manufacturing Technician
44 N85S001 Bio-Medical Technician
45 N85S031 Electrocardiography (ECG) Assistant
46 N85S032 Emergency Medical Technician
47 N85S012 Pharmacy Technician
48 D92S008 Sport Masseur

**6 Culinary and Hospitality:**

49 H55S010 Professional Cookery
50 H55S007 Housekeeping
51 H55S028 Barista
52 H55S004 Bar Tender
53 H55S032 Banquet Associate
54 D15S007 Commis (Pastry & Bakery)
55 F45F001 Bar Bender

**7 Design and Creative:**

56 D22S002 Computer Graphic Designer
57 D22T001 Digital Imaginary Printing
58 D36S007 Jewellery Design and Manufacturing Technology
59 D36S007 Jewellery Maker
60 F45T003 Draughting Technology
61 D19S001 Footware Craftsman
62 D36S001 Wood Craftman
63 F45T005 Interior Design Technology

**8 Electronics and Electrical:**

64 K72S015 Computer Hardware and Network Technician
65 E41S003 Domestic Plumber
66 E40S003 Electric Motor Winder
67 E40S001 Electrician
68 E40S002 Household Electrical Appliance Repairer

69 E41S002 Industrial Plumber
70 D29S002 Refrigeration and Air Conditioning Mechanic
71 D29S004 Sewing Machine Mechanic
72 D28S002 Welder
73 D28S007 Millwright Technician
74 D28T001 Welding Technology
75 E403001 Electrical Technology

**9 Information Technology:**

76 K72S014 Software Developer
77 K72S009 Mobile Phone Repair Technician
78 K72S005 Web Developer
79 K72S012 Multimedia Designing Associate

**10 Management and Administration:**

80 K74S002 Receptionist
81 K74S001 Secretary (Secretarial Practices)
82 K74S006 Survey Field Assistant
83 H55T001 Travel and Tour Management
84 J65S001 Business Associate

**11 Media and Communication:**

85 D32S001 Radio, TV and Allied Equipment Repairer
86 D32S002 Industrial Electronic Craftsman
87 D32T003 Television Program Production Technology
88 O92S004 Video Editor / Assistant Editor
89 I64S001 Telecommunication Technician
90 I64S003 Telecommunication Tower Technician
91 I64S004 Satellite TV and Broadband Technician

**12 Miscellaneous:**

92 O92S006 Physical Fitness Trainer
93 D15S001 Fruit and Vegetable Processor
94 I63S002 Heavy Vehicle Operator

**13 Teaching and Education:**

95 M80S001 Pre-School Teacher
96 T33S001 Industrial Mechatronics Technician
97 M80T002 Pre-School Management

**14 Science and Technology:**

98 D153001 Food Technology

99 N85T007 Pharmaceutical Production Technology
100 D33T002 Computer Numerically Controlled Manufacturing Technology

## 3. விண்ணப்பிக்கும் முறை

1. இணைய வழியிலான விண்ணப்பம் பிரதான 03 பகுதிகளைக் கொண்டுள்ளது.

- முதல் பகுதி :
  மாணவ/மாணவியின் தகவல்கள்
- இரண்டாம் பகுதி:
  தாய் /தந்தை/பாதுகாவலரின் தனிப்பட்ட மற்றும் தொழில் ரீதியான தகவல்கள்
- மூன்றாம் பகுதி:
  தாய் /தந்தை/பாதுகாவலரின் தற்போதைய தொழில் வழங்குநரின் தகவல்கள் மற்றும் ஆவணங்களை தரவவேற்றம் செய்தல்.

## 4. நலன்களுக்கு விண்ணப்பித்தல்

I. இணைய வழியிலான விண்ணப்பத்தை பூரணப்படுத்த முன்னர், தற்போதைய தொழில் வழங்குநரால் பூரணப்படுத்த வேண்டிய(EMP Form)விண்ணப்பத்தை தரவிறக்கம் (Download) செய்து கொள்ளல் வேண்டும்.

II. அவ்வாறு தரவிறக்கம் செய்த தொழில் வழங்குநரின் விண்ணப்பத்தை(EMP Form)தாய் /தந்தை/பாதுகாவலரின் தற்போதைய தொழில் வழங்குநர் மூலம் பூரணப்படுத்திக் கொள்ளவேண்டியது கட்டாயமாகும்.

III. இந்த நலனைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஏனைய ஆவணங்கள்

1. தற்போதைய தொழில் வழங்குநரால் பூரணப்படுத்தி உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பம்.
2. மாணவ/மாணவியின் தேசிய அடையாள அட்டையின் தெளிவான பிரதி.
3. மாணவ/மாணவியின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் தெளிவான பிரதி.
4. மாணவ/மாணவியின் பெறுபேற்று அட்டவணையின் தெளிவான பிரதி (பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் (Download) செய்துகொள்ளல் வேண்டும்
5. அங்கத்தவரின் தேசிய அடையாள அட்டையின் தெளிவான நிழற் பிரதி.
6. விண்ணப்பத்தை சமர்ப்பிப்பது)தாய் /தந்தை அல்லாதபோது (பாதுகாவலர் எனின்,சட்டரீதியான பராமரிப்பு பொறுப்பை உறுதிப்படுத்த தேவையான ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. இல 2 முதல் 6 வரையிலான ஆவணங்கள் தற்போதைய தொழில் வழங்குநர் மூலம் அல்லது கிராம அலுவலர் மூலம் அல்லது சட்டத்தரணி மூலம் அல்லது சமாதான நீதவான் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் அந்த ஆவணங்களின் பிரதிகளை தரவேற்றம் (Upload) செய்தல் வேண்டும்.
8. மாணவ/மாணவியின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாய் /தந்தை/பாதுகாவலரின் பெயர் அங்கத்தவரின் தேசிய அடையாள அட்டையில் உள்ள பெயருடன் வித்தியாசப்படுமிடத்து அந்த அனைத்து பெயர்களாலும் அறியப்படுவது ஒரே நபர் என்பதை உறுதிப்படுத்தி தொழில் வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொண்ட கடிதம்.
9. அங்கத்தவரின் தேசிய அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருக்கும் படிவம் II (Form II) அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயருக்கும் இடையில் வித்தியாசம் இருப்பின் அந்த அனைத்து பெயர்களாலும் அறியப்படுவது ஒரே நபர் என்பதை உறுதிப்படுத்தி தொழில் வழங்குநரிடமிருந்து பெற்றுக்கொண்ட கடிதம்.

மேலுள்ள ஆவணங்களை வருடி எடுத்து (Scan)PDF கோவையொன்றைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

IV. அந்த PDF கோவையை பிள்ளையின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தினால் பெயரிட்டுக் கொள்ளல் வேண்டும். (Rename)

V. இணைய வழியிலான விண்ணப்பத்திற்கு பிரவேசிப்பதற்கு www.etfb.lk இணையத்தளத்தில் பிரவேசித்து நிபுணதாசவிய நலன் திட்டத்தை Click செய்யவும். 3 பகுதிகளைக் கொண்ட நலன் விண்ணப்பத்தைப் பூரணப்படுத்தி இறுதியில் தாங்கள் தயாரித்துக் கொண்ட PDF கோவையை தரவேற்றம் செய்யவும். (Upload)

❖ விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் பங்களிப்புத் தொகை செலுத்திய விபரங்கள் எமது அறிக்கைகளுடன் பரிசோதிக்கப்பட்டு இந்த நலன் திட்டத்திற்கு தாங்கள் தகைமை பெற்றுள்ளீரா என்பது தொடர்பில் மின்னஞ்சல் மூலம் **(Email)** மற்றும் குறுஞ்செய்தி (SMS) மூலம் தங்களுக்கு அறிவிக்கப்படும்.

## 5. பாடநெறிக் கட்டணங்களைச் செலுத்துதல்

பாடநெறி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதென ஏற்புடைய சான்றிதழ்கள் /ஆவணங்கள் எமக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் பின்வரும் முறைகளின் கீழ் பாடநெறிக் கட்டணம் செலுத்தப்படும்.பாடநெறி பதிவுக் கட்டணத்தை தாங்கள் செலுத்துதல் வேண்டும். அந்தத் தொகை மீளளிப்புச் செய்யப்பட மாட்டாது.

### 1.பாடநெறிக் கட்டணத்தை நேரடியாக தொழிற் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்துதல்.

எமது சபையினால் தங்களது விண்ணப்பப்படிவம் தகைமைப் பெற்றுள்ள விண்ணப்பப்படிவமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்திய பின்னர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற் பயிற்சிப் பாடநெறியொன்றை(NVQ) தெரிவு செய்து அந்தப் பாடநெறியை பயிலுவதற்கு உத்தேசிக்கும் நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். பதிவு செய்த ஆவணங்களை சமர்ப்பித்த பின்னர் எமது சபையினால் உரிய நிறுவனத்திற்கு பாடநெறிக் கட்டணத்தை செலுத்துவதற்கான உத்தரவாதக் கடிதம் (Guarantee Letter) வழங்கப்படும்.

வெற்றிகரமாக பாடநெறியை நிறைவு செய்த பின்னர் அதிக பட்சமாக ரூ.50,000/-க்கு உட்பட்ட வகையில் பாடநெறிக் கட்டணம் எமது சபையினால் ஏற்புடைய தொழிற் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்படும்.

### 2.பாடநெறிக் கட்டணத்தை மாணவ/மாணவிகளுக்கு மீளளிப்புச் செய்தல்.

பாடநெறிக் கட்டணம் ஏற்புடைய மாணவ/மாணவியினால் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டு பாடநெறியை ஆரம்பித்திருப்பின் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர்,பணம் செலுத்தப்பட்டதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்ப்பிப்பதன் மூலம் அந்தத் தொகை மீளளிப்புச் செய்யப்படும். அதற்காக விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது மாணவ/மாணவியின் வங்கிக் கணக்கு தகவல்களை எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

2023 உயர் தரப் (2024) பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகள் வருமுன்னர் எமது அனுமதிக்கப்பட்ட பாடநெறிகளை தொடர்ந்திருப்பின் அந்த மாணவ/மாணவிகளுக்கும் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி இலக்கம் : 0117747200/

0117747281/0117747282 (புலமைப் பரிசில் பிரிவு)